සියලුම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது / All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

தரம் 08 | முதலாம் தவணைப் பரீட்சை - 2019 | 16 T

சுட்டெண் .............................................. **இஸ்லாம்** நேரம் 2 மணித்தியாலம்

## பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **மிகப் பொருத்தமான விடையினை தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

01. தௌஹீதுக்கு முரணான அனைத்து நம்பிக்கைகளும்
    1) ஷிர்க் 2) மஆத் 3) இபாதத் 4) றிஸாலத்

02. ஐவேளைத் தொழுகைகளில் கட்டாயம் ஓதப்படவேண்டிய சூறா
    1) சூறா அலக் 2) சூறா அஹத் 3) சூறா கத்ர் 4) சூறா பாத்திஹா

03. தௌராத் வேதம் வழங்கப்பட்ட நபி
    1) ஈஸா (அலை) 2) மூஸா (அலை) 3) தாவூத் (அலை) 4) முஹம்மத் (அலை)

04. மீண்டும் எழுப்பப்படும் மறுமையைக் குறிக்கும் சொல்
    1) றிஸாலத் 2) ஸிபாத் 3) மஆத் 4) தௌஹீத்

05. கல்மாரி பொழிதலைக் கொண்டு அழிக்கப்பட்ட சமூகம்
    1) நபி லூத் (அலை) அவர்களின் சமூகம்
    2) நபி ஸாலிஹ் (அலை) அவர்களின் சமூகம்
    3) நபி நூஹ் (அலை) அவர்களின் சமூகம்
    4) நபி ஹூத் (அலை) அவர்களின் சமூகம்

- **பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி (✓) எனவும், பிழையாயின் பிழை (✗) எனவும் அடையாளமிடுக.**

6. தாய் தனது குழந்தைகளை நேசிப்பதை விட அல்லாஹ் தனது அடியார்களை நேசிக்கின்றான். (.........)

7. இத்ரீஸ்(அலை) அவர்களுக்கு 50 ஸுஹுபுகள் கொடுக்கப்பட்டன. (.........)

8. அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தவதற்காக செய்யப்படுகின்ற ஸஜ்தா, ஸஜ்தா ஸஹ்வு என அழைக்கப்படும். (.........)

9. இஸ்லாமிய மாதங்களில் ரமழான் மாதம் 9வது மாதமாகும். (.........)

10. “பிரார்த்தனை மு:மினின் ஆயுதமாகும்” என்பது அல்குர்ஆனின் கூற்றாகும். (.........)

- **பின்வருவனவற்றை பொருத்தமான சொற்களைக் கொண்டு இணைக்க**

| | |
|---|---|
| 11. துஆ | ஆதம்(அலை) |
| 12. ஸபப் | வித்ர் |
| 13. ஜமாஅத்தாக தொழக்கூடியது | தராவிஹ் |
| 14. ஒரு நாளின் இறுதித் தொழுகை | பிரார்த்தனை |
| 15. அபுல் பஷர் | நியதி |

- **பின்வரும் வினாக்களுக்கு பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.**

16. மூஸா (அலை) அவர்கள் ........................................... நபிமார்களுள் ஒருவர்.



kalvi.lk

17. மு.்.ஜிஸா என்றால் ………………………………………….. என்று பொருளாகும்.

18. "காத்தமுன் நபிய்யீன்" என அழைக்கப்பட்டவர் ……………………………….. ஆவார்.

19. "ரூஹுல்லாஹ்" என்பது ………………………………………. அவர்களின் சிறப்புப் பெயராகும்.

20. அல்குர்ஆனில் ………………………………………………. வசனங்கள் காணப்படுகின்றன.

(6666, 114, மூஸா(அலை), ஈஸா(அலை), உலுல் அஸ்ம், அற்புதம், நபி(ஸல்), ஆதம்(அலை).

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

## பகுதி II

- **முதலாம் வினா உற்பட மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. சுருக்கமான விடை தருக.

1. ஈமானின் அடிப்படை நம்பிக்கைகள் 2 தருக.
2. அல்லாஹ்வின் அன்பை வெளிப்படுத்தும் திருநாமங்கள் 2 தருக.
3. அல்லாஹ்வின் அருட்கொடைகள் 2 தருக.
4. ஸக்காத் என்ற சொல்லின் கருத்துகள் 2 தருக.
5. இப்திராஷ், தவர்ருக் ஆகிய பதங்களை விளக்குக.
6. றஸூல்மார்கள் இருவரின் பெயர்களையும், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வேதங்களையும் தருக.
7. தொழுகையில் பர்ளான ஓதல்கள் 2 தருக.
8. ஸஜ்தாக்களின் வகைகள் எத்தனை? அவற்றில் 2 தருக.

(2x8=16 புள்ளிகள்)

02. 1. அல்குர்ஆனின் தனித்துவமான சிறப்புக்கள் 3 தருக.
2. நபிமார்கள் நால்வரின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களுக்கு கொடுக்கப்பட்ட அற்புதங்களைக் குறிப்பிடுக.
3. தொழுகையின் மறுமைப் பயன்கள் 4 தருக.

(3+4+4=11 புள்ளிகள்)

03. 1. தொழுகையின் சுன்னத்தான ஓதல்கள் 3 தருக.
2. பர்ளு ஐன் என்றால் என்ன? பர்ளு ஐனுக்கு 2 உதாரணங்கள் தருக.
3. ஸஜ்தா ஷுக்ர் செய்யும் 4 சந்தர்ப்பங்களைத் தருக.

(3+4+4=11 புள்ளிகள்)

04. 1. றமளானில் கடைபிடிக்க வேண்டிய நல்லமல்கள் 3 தருக.
2. றமளான் மாத நோன்பின் மூலம் கிடைக்கும் பயன்கள் 4 தருக.
3. ஸக்காத்திற்கும் ஸதகாவிற்கும் இடையிலான வித்தியாசங்கள் 4 தருக.

(3+4+4=11 புள்ளிகள்)

04. 1. பிரார்த்தனையின் ஒழுங்குகள் 3 தருக.
2. பிரார்த்தனை செய்வதற்கான பொருத்தமான நேரங்களைக் குறிப்பிடுக.
3. பிராரத்தனை பற்றிய ஹதீஸ் ஒன்று தருக.

(3+4+4=11 புள்ளிகள்)

05. 1. உலுல் அஸ்மில் உள்ளடங்கும் நபிமார்கள் மூவரைத் தருக.
2. அல்லாஹ்விடம் உதவி தேடுவதால் கிடைக்கும் நன்மைகள் 4 தருக.
3. நாளாந்தம் நிறைவேற்றக் கூடிய சுன்னத்தான தொழுகைகள் 4 தருக.

(3+4+4=11 புள்ளிகள்)



kalvi.lk

**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**முதலாம் தவணைப் பரீட்சை - 2019**
**தரம் 08 - இஸ்லாம்**
**விடைப்பத்திரம்**

## பகுதி I

| வினா இல. | விடை | வினா இல. | விடை |
|---|---|---|---|
| 1. | ஷிர்க் | 1. | பிரார்த்தனை |
| 2. | சூரா பாத்திஹா | 2. | நியதி |
| 3. | மூஸா (அலை) | 3. | தராவீஹ் |
| 4. | மஆத் | 4. | வித்ர் |
| 5. | லூத்(அலை) அவர்களின் சமூகம் | 5. | ஆதம் (அலை) |
| 6. | சரி | 6. | உலுல் அஸ்ம் |
| 7. | பிழை | 7. | அற்புதம் |
| 8. | பிழை | 8. | நபி (ஸல்) |
| 9. | சரி | 9. | ஈஸா (அலை) |
| 10 | பிழை | 10. | 6666 |

## பகுதி II

| வினா இல. | | விடை |
|---|---|---|
| 01. | 1. | தௌஹீத், நிஸாலத், மஆத் |
| | 2. | அர்ரஹ்மான், அர்ரஹீம். |
| | 3. | காற்று, நீர். |
| | 4. | வளர்ச்சி, தூய்மை, அபிவிருத்தி. |
| | 5. | இப்திராஷ் - முதலாம் அத்தஹிய்யாத் இருப்பு.<br>தவர்ருக் - இரண்டாம் அத்தஹிய்யாத் இருப்பு. |
| | 6. | ஈஸா (அலை) - இன்ஜீல், தாவூத் (அலை) - ஸபூர். |
| | 7. | 1. சூரா பாத்திஹா. 2. தக்பீர் தஹ்ரீமா |
| | 8. | 1. ஸஹ்வு 2. திலாவத். |
| 02. | 1. | முழுமையாகப் பாதுகாக்கப்பட்ட வேதம்.<br>அனைவருக்கும் பொதுவான வேதம்.<br>முழுமையான வழிகாட்டல். |
| | 2. | 1. மூஸா(அலை) - கைத்தடி பாம்பாகுதல், கை பிரகாசித்தல்.<br>2. தாவூத்(அலை) - இரும்பு மிருதுவாக்கப்படல்.<br>3. ஸுலைமான்(அலை)- ஜின்கள், காற்று, போன்றன வசப்படுத்தப்படல், ஏனைய உயிரினங்களின் மொழியை விளங்குதல்.<br>4. முகம்மது (ஸல்) - அல்குர்ஆன். |
| | 3. | 1. பாவக்கறைகளை நீக்குகிறது.<br>2. பிரகாசம் தருகின்றது.<br>3. மலக்குமார்கள் பிரார்த்தனை புரிகின்றனர்.<br>4. உயர்ந்த அந்தஸ்தை தருகின்றது. |
| 03. | 1. | துஆஉல் இஸ்திப்தாஹ்<br>ருகூவில் ஓதும் தஸ்பீஹ்<br>ஸுஜூதில் ஓதும் தஸ்பீஹ் |
| | 2. | ஒவ்வொரு முஸ்லிம் கட்டாயமாக நிறைவேற்ற வேண்டியது<br>1. ஐவேளைத் தொழுகை<br>2. ஜும்ஆத் தொழுகை<br>3. நேர்ச்சை தொழுகை |
| | 3. | 1. மகிழ்ச்சியான செய்தி கிடைத்தால்<br>2. ஏதாவது ஒரு காரியம் இலகுவாகினால் |



kalvi.lk

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 3. ஆபத்தொன்றிலிருந்து பாதுகாப்பு பெற்றால்<br>4. தீராத நோய்கள் குணமடைந்தால்<br>( பொருத்தமான விடை எழுதியிருப்பின் புள்ளி வழங்கவும்) | |
| 04. | 1. | | நோன்பு நோற்றல்<br>இரவுத் தொழுகை<br>அல்குர்ஆன் ஓதல்<br>இஃதிகாப் இருத்தல் | |
| | 2. | | இறையச்சத்தை வார்த்தல்<br>பொறுமையை கற்றுத்தருதல்<br>உடலாரோக்கியம் கிடைத்தல்<br>பாவங்களிலிருந்து விலகும் பக்குவத்தை தடுதல் | |
| | 3. | | ஸகாத் — ஸதகா<br><br>பர்ளானது, குறிப்பிட்ட சிலர் மீது கடமை — சுன்னத்தானது<br>குறிப்பிட்ட பொருளில் மாத்திரம் கொடுக்கலாம் — விரும்பிய எவரும் கொடுக்கலாம்<br>எவ்வாறு கொடுக்க வேண்டும் எனும் நிபந்தனை உண்டு — விரும்பிய விதத்தில் கொடுக்கலாம் | |
| 05. | 1. | | வுழூவுடன் பிரார்த்தித்தல்<br>கிப்லாவை முன்னோக்குதல்<br>மூன்று முறை கேட்டல் | |
| | 2. | | பிந்திய இரவு வேளைகள்<br>வெள்ளிக்கிழமை<br>றமழான் மாதம்<br>அறபா தினம் | |
| | 3. | | "யார் அல்லாஹ்விடம் பிரார்த்திக்கவில்லையோ அவன் மீது அல்லாஹ் கோபப்படுகின்றான்" - ஹதீஸ் - | |
| 06. | 1. | | மூஸா (அலை)<br>ஈஸா (அலை)<br>முஹம்மத் (ஸல்) | |
| | 2. | | அல்லாஹ் பொருத்தமான ஸபப்களின் பக்கம் வழிகாட்டுவான்.<br>அல்லாஹ்வின் நெருக்கமும் பொருத்தமும் கிடைக்கும்.<br>எமது கௌரவமும் பாதுகாக்கப்படுகின்றது.<br>அல்லாஹ்விடம் கேட்பதற்கு நன்மைகள் எழுதப்படும். | |
| | 3. | | தஹஜ்ஜத்<br>வித்ர்<br>ளுஹா<br>ஐவேளை தொழுகையின் முன் பின் தொழுகைகள். | |



kalvi.lk

# ONLINE CLASSES
## TAMIL MEDIUM

அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்....

# GRADE 8

**திறமை வாய்ந்த ஆசிரியர்களினூடான சிறந்த வழிகாட்டலுடன் கூடிய வினைத்திறன் மிக்க நிகழ்நிலை வகுப்புகள்.**

FREE **ADMISSION**

**075 287 1457**

| | | |
|---|---|---|
| தமிழ் | வரலாறு | சுகாதாரம் |
| விஞ்ஞானம் | English | புவியியல் |
| கணிதம் | ICT | குடியியல் |

- **Spoken English Classes.**
- **Sinhala Reading and Writing Classes.**
- **Map Marking Classes**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**

**Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும். (தனிப்பாட அனுமதிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்)**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page